மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் திருமதி ரமணி நல்லதம்பி அவர்கள் பச்சையாறு திட்டத்தை விட கொடுமுடியாறு திட்டத்திலேதான் மேலும் அக்கறை உள்ளவர்கள் என்பது எனக்குத் தெரியும். அந்தத் திட்டத்திற்கு ஏற்கெனவே மத்திய அரசு அனுமதியைப்பெற்று விட்டோம். ஆகவே விரைவிலே அதை பொதுப் பணித் துறை நிறைவேற்றுவதற்கான பணியை ஏற்றுக்கொள்ளும் என்று கருதுகிறேன். அதேபோல பச்சையாறு திட்டத்திற்கும் மத்திய அரசை அணுகி அனுமதியைப் பெறுவோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்ராயன் மலையில் சந்தன தொழிற்சாலை.

*4196 திரு. எம். முத்தையன் :

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கல்ராயன் மலையில் சந்தன தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

கல்ராயன் மலையில் சந்தன தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

திரு. எம். முத்தையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'ஃபர்ஸ்ட்', 'செகன்ட்', 'தேர்டு' என்று சொல்வது போல பெரிய விவசாயி, சின்ன விவசாயி, குறு விவசாயி, மிகக் குறு விவசாயி என்று சொல்கின்ற அளவுக்கு மலையில் இருக்கின்றவர்கள் மிகமிகச் சின்ன விவசாயி களாக அந்தப் பகுதி மக்கள் இருக்கின்றார்கள். அவர்கள் மிகமிக எளிமையானவர்கள். அவர்கள் நீர்வளம், நிலவளம் இல்லாதவர்கள், ஒரு கவிஞர் சொன்னார், காலுக்கு செருப்பு இல்லை, கால் வயிறு கஞ்சி இல்லை, குடிக்க கஞ்சி இல்லை, குடியிருக்க வீடு இல்லை, அந்தமாதிரி 41 வருடங்கள் ஆகிவிட்ட பின்னரும் இன்னும் அந்தமாதிரியான பக்குவத்தில் தான் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே அந்த மக்களுக்கு சந்தன மரங்களைப் பயன்படுத்தி ஒரு தொழிற்சாலை உருவாக்க ஏற்பாடு செய்ய வேண்டும். நம்முடைய கருணை யான அரசு யார் யாருக்கோ அள்ளி அள்ளிக் கொடுக்கிறது. நம் முடைய தலைவர் என்னுடைய கேள்விக்குக் கொஞ்சம் கருணை காட்டுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

1990 சனவரி, 27]

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே வட ஆற்காடு மாவட்டத்தில் — இப்போது அம்பேத்கார் மாவட்டம் என்று நினைக்கிறேன்— அந்தப் பகுதியிலே தெற்குப்பட்டு என்ற ஊரிலே ஒரு சந்தனமர ஆலை முந்தைய அரசால் நிறுவப்பட்டு இன்னும் அது ஓடாத நிலையில் இருக்கின்றது. சந்தன மரங்களை ஜவ்வாது மலையில் அடிக்கடி வெட்டிக் கடத்திச் செல்கிறார்கள் என்று எல்லாம் தகவல் வந்து கொண்டிருக்கின்றது. அதைத் தடுத்து நிறுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்து கொண்டிருக்கின்றோம். ஆனால் வனத் துறை இன்னும் அங்கு முறைப்படி சந்தன மரங்களை வெட்டி எடுப்பதற்கான திட்டம் வகுக்கவில்லை. அதை உடனடியாகச் செய்து, அங்கே கிடைக்கக் கூடிய சந்தன மரங்களை வெட்டி எடுத்து அதை ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்யவும், அதற்குப் பிறகு இருக்கின்ற ஆலையை ஓட்டியபிறகு இன்னொரு ஆலைபற்றி யோசிக்கலாம்.

மணி 10-05

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கிற காடுகளில் சந்தன மரங்கள் பரவலாகக் கள்ளக் கடத்தல் செய்யப்பட்டு, வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறது. மேலும் காடுகளில் காவல் இருக்கிற ஃபாரஸ்ட் அதிகாரிகள்— காவலர்கள் ஆகியோர்களில் பெரும்பான்மையானவர்கள் கள்ளக்கடத்தலில் ஈடுபடுகிறவர்களால் தாக்கப்படுகிறார்கள்— சில நேரங்களில் அவர்கள் கொலை செய்யப்படுகிற நிலையும் இருக்கிறது. அவர்களுக்கெல்லாம் தற்போது சரியான பாதுகாப்பு இல்லை, எனவே, அவர்களுக்கு ஒயர்லெஸ் கருவிகள் வழங்கப்பட்டு, நல்ல சக்தியுள்ள துப்பாக்கிகள் வழங்கப்பட்டு கள்ளக் கடத்தலைத் தடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஜனதா தளத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் அவர்கள் எழுப்பிய பிரச்சினை மிகவும் அவசரமும் அவசியமும் வாய்ந்த பிரச்சினை. 10 ஆண்டுகளாக அந்தக் கள்ளக் கடத்தல் கும்பல் காட்டுப்பகுதிகளிலே மிக அதிகமான அளவிலே கொள்ளை அடித்துக்கொண்டிருந்தது. யானைகளைக் கொன்று தந்தத்தை எடுத்துச் செல்வது, சந்தன மரங்களை வெட்டிச் செல்வது போன்றவைகளில் ஈடுபட்டு வந்தது. கடந்த 2 ஆண்டுகளாக வனத்துறையினருக்கும் அந்தக் கும்பலுக்குமிடையில் சில நேரங்களில் நேருக்கு நேராக சண்டை நடந்து. வனத்துறையைச் சார்ந்த சிலரும் உயிரிழந்திருக்கிறார்கள். ஆனால், சமீப காலத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, போலீஸ் துறையையும் இதிலே இணைத்து, தீவிரமான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்போது கள்ளக் கடத்தல் வெகுவாகக் குறைந்துவிட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கல்ராயன் மலைவாழ் மக்கள், நீண்ட நெடுங்கால மாக ஜாகீர்தார்கள் காலத்திலிருந்து அங்கே வசித்துக்கொண்டு பயிர் செய்து வருகிறார்கள். ஜாகீர்தார்களை அகற்றிவிட்ட பிறகு, அங்கே அரசு சந்தன மரங்களைப்போன்ற பல்வேறு மரங்களைப் பயிரிடுவதற்கான வகையில் கன்றுகளை நடுவதற்கு ஏற்பாடு செய்து, அந்த விவசாயிகள் பூராவும் வெளியேற்றப் படுகிறார்கள். எனவே, இந்த நிலையைத் தடுத்து தொன்று தொட்டு அங்கே பயிர் செய்து வரும் அந்த விவசாயிகளுக்கு அந்த நிலங்களை அளிக்க முன்வருமா—வனத்துறையின் மூலம் இதைச் செய்ய முடியாது என்றாலும் நம் மாநில அரசு மத்திய அரசின் அனுமதியைப் பெற்றாவது அவர்கள் பயிரிட்டு வரும் நிலங்களைப் பட்டா செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப் பிட்டது ஒரு முக்கியமான பிரச்சினை. நீண்ட நெடுங்கால மாக இருந்து கொண்டு வருகிறார்கள் அந்த மலை வாழ் மக்கள். ஜாகீர்தார்களின் நிலங்களை வனத்துறை எடுத்துக்கொண்ட பிறகு, குடியிருப்பவர்களின் சொந்த நிலம் எது என்பது திட்டவட்டமாகச் சொல்ல முடியாத நிலை இருக்கிறது. ஏனென்றால், ''ஷிப்டிங் கல்டிவேஷன்''—அதாவது மூன்று ஆண்டுகள் ஒரு இடத்தில் விவசாயம் செய்கிறார்கள். அங்கே உள்ள மண்ணின் வளம் குறைந்த பிறகு, அவர்கள் இன்னொரு இடத் திற்குச் சென்று விவசாயம் செய்கிற முறை அவர்களுக்கு இருக் கிறது. இருந்தாலும்கூட, தென்னாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக இப்போது ஆங்காங்கே இருப்பவர் களைப்பற்றி கணக்கெடுத்து, அதன் மூலமாக அவர்களுக்குப் பட்டா கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு இருக்கிறது.

விவசாய பம்பு செட்டுகளுக்கு பகலில் மின்சாரம் வழங்குதல்.

***410 திரு. கே. ஏ. மணி :**

மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

விவசாய பம்பு செட்டுகளுக்கு இரவில் மின்சாரம் வழங்கு வதை மாற்றி பகலில் மட்டுமே மின்சாரம் வழங்கும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.